Golden Point Award 2023
Tamil Short Story – Third Prize
*ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய மழை* by Banu Suresh

வேழம் பிளிறும் சத்தம் தூரத்தில். அருவியின் சாரல், மூங்கில் மரங்களைத் தாண்டி காற்றில் கலந்துவருகிறது. பிறந்து மூன்று நான்கு மாதங்களேயான குட்டி, தாயின் காம்புகளை முட்டி முட்டி குடிக்க, எந்த ஆபத்துமில்லை என்பதை உள்ளுணர்வால் உணர்ந்துவிட்ட மான் கண்மூடி நிற்கிறது. வேங்கை மரத்தின் குளிர்ச்சியான நிழலில். இளங்காடனுக்கு மானையும் குட்டியையும் பார்த்ததும், அவன் மனைவி இளவெயினியும் மகள் நவ்வியும் நினைவுக்கு வந்தார்கள். நவ்வி என்றாலும் மான்குட்டிதான். ஆனால், நவ்வி மான்குட்டியைவிட அழகானவள். அவர்களை குகையில் விட்டுவிட்டு, இளங்காடன் மிக அதிகாலையிலேயே காட்டுக்குள் கிளம்பி வந்துவிட்டான். இன்றைக்குப் போதுமான பழங்களையும் கொஞ்சம் கிழங்குகளையும் சேகரித்துக்கொண்டான். ஒரு சிறிய தேனடையையும் அறுத்துக்கொண்டான். ‘இந்நேரம் நவ்வி எழுந்து தேட ஆரம்பித்திருப்பாள், இளவெயினியும் இவ்வளவு நேரப் பிரிவைத் தாங்க மாட்டாள்’ என்று நினைத்த இளங்காடன் அங்கிருந்து விரைந்து நடந்தான்.